# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பணச் சட்ட (திருத்தச்) சட்டம்

---

(1998, மாச்சு மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1998, மாச்சு மாதம் 27 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 5.25 தபாற் செலவு : ரூபா 2.50

## 1998 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பணச் சட்ட (திருத்தச்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ 32/97

### பணச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

1. இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பணச் சட்ட (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். — *சுருக்கப் பெயர்.*

*422 ஆம் அத்தியாயத்தில் 52அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணச் சட்டத்தின் 52 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுகின்றது என்பதுடன் அது அச்சட்டத்தின் பிரிவு 52அ என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :—

*"ஞாபகார்த்த நாணயத்தாள்கள் அல்லது நாணயக் குற்றிகள் வழங்கல்.*

52அ. (1) (அ) மத்திய வங்கியானது, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துடனும் 58 ஆம் பிரிவிற்கு அமையவும், ஞாபகார்த்த நாணயத் தாள்களை அல்லது நாணயக் குற்றிகளை வழங்கலாம் ;

(ஆ) இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஞாபகார்த்த நாணயத் தாள்கள் அல்லது நாணயங்கள்,

அத்தகைய நாணயத் தாள்களிலும் நாணயக் குற்றிகளிலும் குறித்துரைக்கப்பட்ட பெறுமானத் தொகையை விடக் கூடுதலானதும் அத்துடன் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் தீர்மானிக்கப்பட்டதுமான விலை யொன்றுக்கு விற்கப்படலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஞாபகார்த்த நாணயத்தாள் அல்லது நாணயக்குற்றி ஒன்றை அத்தகைய நாணயத்தாளில் அல்லது நாணயக்குற்றியில் குறித்துரைக்கப் பட்ட பெறுமானத் தொகையைவிடக் கூடுதலான விலை யொன்றுக்கு விற்பனை செய்தலானது, 58அ என்னும் பிரிவின் மீறுகையொன்றாகக் கருதப்படுதல் ஆகாது.

2-௧௨- 047290 - 1,100 (98/01)

(3) இப்பிரிவில் ஞாபகார்த்த நாணயத்தாள் அல்லது நாணயக்குற்றி என்பது எவரேனும் ஆளை அல்லது விசேட சம்பவமொன்றை நினைவுகூருவதற்காக வழங்கப்பட்டவொரு நாணயத்தாள் அல்லது நாணயக்குற்றி எனப் பொருள்படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:–

(1) அப்பிரிவை 55 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலமும் ;

(2) மீள இலக்கமிடப்பட்ட அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "எவரேனும் ஆளினால் மத்திய வங்கிக்கு ஒப்படைக்கப்படுவதன்மீது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவரேனும் ஆளினால், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மத்திய வங்கிக்கு ஒப்படைக்கப்படுவதன்மீது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) மீள இலக்கமிடப்பட்ட அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும் :

"(2) ஒராம் உட்பிரிவிலுள்ள எதுவும், தேவைப்படுத்தப்பட்ட நாணயத்தாள் அல்லது நாணயக்குற்றி அத்தகைய நாணயத்தாளில் அல்லது நாணயக்குற்றியில் குறித்துரைக்கப்பட்ட தொகையினதொன்றாக இருக்குமிடத்து, 52 அ என்னும் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் ஞாபகார்த்த நாணயத்தாளை அல்லது நாணயக் குற்றியை, (1) ஆம் உட்பிரிவின் கீழான கோரிக்கையின்மீது ஒப்படைக்குமாறு மத்திய வங்கியின்மீது கடப்பாடொன்றைச் சுமத்துவதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதலாகாது.".

4. இச்சட்டத்தின் 2 ஆம், 3 ஆம் பிரிவுகளால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 1998 பெப்புருவரி 4 ஆம் தேதியன்று வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் 1998 பெப்புருவரி 4 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னரும் அத்துடன் இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னரும் வழங்கப்பட்ட அல்லது விற்கப்பட்ட ஏதேனும் ஞாபகார்த்த நாணயத்தாள் அல்லது நாணயக்குற்றி, எல்லா நோக்கங்களுக்காகவும் சட்டமுறையாக வழங்கப்பட்டுள்ளதாகவும், வழங்கப்படுவதாகவும் அல்லது விற்கப்பட்டுள்ளதாகவும் விற்கப்படுவதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

5. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை எதுவும் ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.